முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 976

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.06.2022, புதன்கிழமை

1. அழியாமை தர வந்த குருவே
ஆறுமுகன் என் அவதாரமான ஞான குருவே
உலகோரின் பழி பாவம் நீக்கி
உண்மை ஞானம் அருளும் ஆறுமுக அரங்கனே

2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 18 ம் நாள், 01.06.2022 செவ்வாய்கிழமை)
ஆசிதனை சுபகிருது விடை திங்கள்
ஆறுமுகன் யான் அரங்கன் பலம்பெற உரைப்பேன்

3. வாசிவென்ற ஞானியர் படைகளெல்லாம்
வலம்வந்து அரங்கன் தர்மத்தை காத்துவர
ஆசிபெற்று அரங்கன் வழி இயங்கும் தொண்டர்களெல்லாம்
அரங்கன் வழி வருமுலகில் ஞானிகளாக இருக்க

4. ஆகவே அரங்கன் தரும் உபதேசம்
அகிலத்தை மாற்றக் கூடும் இது சத்தியம்
வகைபட அரங்கன் செய்கின்ற தர்மம்
வல்லமைபட இந்த உலகத்தை பெருமாற்றம் செய்யும்

5. செய்யவே அரங்கனுள் சூட்சுமத்தை சுப்பன் யான்
சக்தியாக வரமாக ஐயமற நித்தம்நித்தம்
ஆற்றல்கூட்டி அரங்கனுக்கு வழங்கிவர
அரங்கன் குடில் தொடர்புகொண்ட மக்களெல்லாம்

6. மக்களெல்லாம் என்னருள் பெற்று இனிதே
மாற்றம் அடைவது உறுதிஉறுதி
உறுதிகொண்டு அரங்கனுள் ஞானமாக
ஓங்காரக்குடிலின் உணவாக

7. கருதிவருகின்ற ஞானத்திருவடி சக்திமிகு நூலாக கருணையாக
கலியுகத்தில் ஆறுமுகன் யான் பல்வேறு சக்தியாக அரங்கன் வழி இயங்குகின்றேன்
இயங்கவே அரங்கன் தொடர்பால்
இந்த உலகம் பெருமாற்றம் கண்டு பாதுகாப்புப் பெறுவது உறுதிஉறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

இந்நூலில் முதல் கவியில் மூன்றாவது வரியில்,

“உலகோரின் பழி பாவம் நீக்கி” என்று மகான் சுப்ரமணியர் அருளியுள்ளதில் பழி பாவம் குறித்து விளக்கம்:–

ஒரு மனிதனுக்கு பழிபாவம் வர, காரணம் பந்தபாசமே. பந்தபாசத்தின் காரணமாக பொருளின் மீது பற்று ஏற்படும். பொருள் பற்றின் காரணமாக சுயநலம் உண்டாகும், சுயநலத்தின் காரணமாக “யான்” என்ற கர்வம் உண்டாகும். யான் என்ற கர்வத்தின் காரணமாக பிற உயிர்களுக்கு துன்பம் செய்து மகிழ்ச்சி அடைவான். பிற உயிர்களுக்கு செய்யும் துன்பமே, பழிபாவம் சூழ்ந்து கொள்ள ஏதுவாகும். மேற்கூறிய அனைத்தும் பழிபாவங்களுக்கு காரணங்களாகும்.

<u>பழி பாவம் இல்லாது வாழ உபாயம் :–</u>

ஒரு மனிதன் பழிபாவம் இல்லாமல் வாழ வேண்டுமென்றால், உயிர்க்கொலை தவிர்த்து, புலால் உணவினை மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு வாரம் ஒரு பசித்த ஏழைக்காவது அன்னதானமிட்டு வர வேண்டும். மேலும், பந்தபாசம் அற்றவனும், நீதிக்கும் ஞானத்திற்கும் தலைவனான ஞானபண்டிதன் முருகப்பெருமான் திருவடியை “ஓம் சரவண ஜோதியே நமோ நம” என்றும் “ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி” என்றும் காலை மாலை சிறிது நேரமாவது பூசித்து வர வேண்டும். பக்தியே மனிதனுக்கு தயை சிந்தையையும், பணிவையும் உண்டாக்கும். பணிவு உள்ளவர்களிடம் நல்ல பண்புகள் இருக்கும். “யான்” என்ற கர்வம் இருக்காது. இதுவே பழிபாவம் அற்ற வாழ்க்கையையும் உண்டாக்கும்.

**முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட**
**வத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.**

**– திருவாசகம் – 51. அச்சோப்பதிகம் – கவி எண் 1.**

முருகப்பெருமான் திருவடியைப் பூசிக்கும் மக்களுக்கு மூர்க்கத்தனம் இருக்காது. அவர்கள் பணிவன்போடு இருப்பார்கள். மூர்க்கத்தனம் என்பதே யான் என்ற கர்வத்தினால் மற்றவர்களை பழி வாங்கும் உணர்ச்சியாகும்.

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணிஅல்ல மற்றுப் பிற.**

**– திருக்குறள் – இனியவை கூறல் – குறள் எண் 95.**

வணக்கம் உடையவனாகவும் இன்சொல் வழங்குவோனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலனாகும்; மற்றைய அணிகள் அணிகள் அல்ல.

– நன்றி மு.வரதராசனார்.

பணிவும் கருணையும் கொண்ட முருகப்பெருமானை பூசிக்கும் மக்களுக்கு யான் என்ற கர்வம் இருக்காது. மேலும் அவர்களிடம் இன்சொற்கள் பேசி பழகும் தன்மையும் இருக்கும். பணிவு கொண்ட மக்கள் அடக்கமாகவும், பிறர் மதிக்கக் கூடிய வகையிலும் வாழ்வார்கள்.

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.**

**– திருக்குறள் – அடக்கம் உடைமை – குறள் எண் 121.**

அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாதிருத்தல், பொல்லாத இருள்போன்ற தீய வாழ்க்கையில் செலுத்திவிடும்.

– நன்றி மு.வரதராசனார்.

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனின்ஊஉங்கு இல்லை உயிர்க்கு.**

**– திருக்குறள் – அடக்கம் உடைமை – குறள் எண் 122.**

அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை.

– நன்றி மு.வரதராசனார்.

ஆன்மாவிற்கு ஆக்கமே பக்தியும் பணிவும்தான். பக்தியே ஒருவரை பக்குவப்படுத்தும் வழிமுறையாகும். அதுவும் உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் திருவடிகளில் செலுத்தும் பக்தியாக இருக்க வேண்டும். இதுவே உண்மையான பக்தியாகும்.

பாரி லுயர்ந்தது பத்தி – அதைப்
பற்றின பேர்க்குண்டு மேவரு முத்தி
சீரி லுயரட்ட சித்தி – யார்க்குஞ்
சித்திக்கு மேசிவன் செயலினால் பத்தி.

– மகான் கடுவெளிச்சித்தர்.

பக்தியே யோகமும் ஞானமும் சித்தி தரும்.

முருகப்பெருமான் திருவடிகளை பூசித்து ஆசி பெறும் மக்களுக்கு இல்லறமும் சிறக்கும், ஞானமும் கைக்கூடும்.

பற்றற்ற முருகனின் பதமலர் பற்றிட
பற்றற்ற வாழ்வும் பரகதியும் கூடுமே.

எந்தை சம்பந்தன் இணையடி போற்றிட
சிந்தையும் தெளிய சிவபதம் சேர்வாரே.

ஆவுடையார் கோயில் அரசாளும் வேந்தனை
நாவுடைய அரசரென நாளும் போற்றுவோமே!

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.